Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 தை 03 புதன்கிழமை (17.01.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 53

## மஹிந்த - ரணில் பேச்சு நேற்று பயனின்றி முடிவு

### மற்றொரு சந்திப்புக்கு ஏற்பாடு

கொழும்பு, ஜன.17

**அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்ற பேச்சு, முடிவுகளோ முன்னேற்றமோ எதுவும் இன்றி முடிவடைந்ததாகத் தெரிகின்றது.**

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஒன்றாக - ஓர் அணியாக - அரசுப் பக்கம் தாவுவதற்குத் தயாராகி வருகின்றனர் என்று கூறப்படும் சமயத்தில், இந்தக் கட்சித் தாவல் மற்றும் இரு கட்சிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் எதிர்காலம் என்பன தொடர்பாக இரு தலைவர்களும் சுமார் 45 நிமிட நேரம் தனியே பேசினர்.

தனது கட்சியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொண்ட பிறகு தனது கட்சி, எம்.பிக்களை வளைத்துப் பிடிக்க அரசுத் தரப்பில் எடுக்கப்பட்டு வரும் முயற்சி பற்றியும், அவை பற்றி ஜனாதிபதி தன்னிடம் தகவல் தெரிவிக்காதது குறித்தும் அதிருப்தியடைந்த நிலையிலேயே ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தார். எனினும், ஐ.தே.கட்சி எம்.பிக்கள் அரசுப் பக்கம் தாவுவதற்கு முயற்சித்து வருவது பற்றி அவர் நேற்றைய பேச்சின்போது ஜனாதிபதியிடம் நேரடியாக எதனையும் குறிப்பிட்டுப் பேசவில்லையென்று தெரியவருகிறது.

மாறாக, தனது எம்.பிக்களை அரசுடன் இணைத்துக் கொள்வது பற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன்னிடம் ஒரு வார்த்தையேனும் கேட்கவில்லை என்ற ஓர் ஆதங்கம் மாத்திரமே ரணிலிடம் இருப்பதாகத் தெரிகிறது.

18 இற்கும் மேற்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்களை அரசுடன் இணைக்க ஜனாதிபதி மேற்கொண்டுவரும் முயற்சியை ரணில் விக்கிரமசிங்க கடுமையாக எதிர்ப்பார் என்றும், இரு கட்சிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உடைத்தெறிவதற்கான தீர்மானம் எதனையும் ரணில் இச்சந்திப்பின்போது தெரிவிப்பார் என்றும்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## வாகரையை அண்டிய பகுதியில் கடும் மோதல்!

### 45 படையினர் பலி - புலிகள் தரப்பு
### 30 புலிகள் மரணம் - படைத்தரப்பு

கொழும்பு, ஜனவரி 17

**வாகரையை அண்டிய பகுதிகளில் நேற்று அதிகாலை 5.30 மணி தொடக்கம் அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நீண்ட நேரம் கடும் மோதல்கள் இடம்பெற்றன.**

வாகரைப் பிரதேசத்தை நோக்கி முன்னேறும் முயற்சியில் இராணுவத்தினர் நேற்று ஈடுபட்டனர் என்றும் -

அதன் போது பனிச்சங்கேணியைக் கைப்பற்றியதாகவும் - தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்தது.

ஆனால், வாகரையைக் கைப்பற்றும் நோக்குடன் உப்பூறலில் இருந்து முகத்துவாரம் நோக்கியும், மாங்கேணியிலிருந்து பனிச்சங்கேணி நோக்கியும் மஹிந்தபுரத்திலிருந்து ஈச்சிலம்பற்று நோக்கியும் படையினர் மேற்கொண்ட மும்முனைத் தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் தரப்பில் சமாதானச் செயலகம் அறிவித்தது.

இந்த மோதல்களில் 45 படையினர் பலியானதாகவும், 150 பேர் காயமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் தரப்பில் சமாதானச் செயலகம் நேற்றிரவு தெரிவித்தது.

நேற்றைய மோதல் பெரிய அளவில் இடம்பெற்றதாகவும் இதில் 30 விடுதலைப் புலி உறுப்பினர்கள் பலியானதாகவும் பலர் காயமடைந்ததாகவும் தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் அறிவித்தது.

தமது தரப்பில் 4 பேர் பலியானதாகவும் 20 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய தரை வழித் தாக்குதலில் 12 போராளிகள் சாவடைந்தனர் என்றும் 7 பேர் காயமுற்றனர் என்றும் - விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்தார்.

## வடமராட்சியில் மாலை 6 மணிக்கு, ஊரடங்கு அமுல்

யாழ்ப்பாணம், ஜன.17

வடமராட்சியில் ஊரடங்குச் சட்டம் இன்று மாலை 6 மணிக்கு நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் என்று பலாலி படைத்தலைமையகம் அறிவித்தது.

இன்று அதிகாலை 4 மணிக்கு நீக்கப்ப

(04 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா புதுக்குளம் பகுதியில் கிளைமோர்; 5 இராணுவம் பலி!

வவுனியா, ஜன.17

வவுனியா-மன்னார் வீதியில், புதுக்குளம் என்ற பகுதியில் நேற்று மாலை 5.10 மணியளவில் இராணுவத் தொடரணியை இலக்குவைத்து நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் 5 படையினர் கொல்லப்பட்டிருக்கின்றனர்; 2 இராணுவத்தினர் காயமடைந்தனர்.

இதில் காயமடைந்த படையினர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் அநுராதபுரம் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டனர் என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. இந்தத் தாக்குதல் தொடர்பான மேலதிக விவரங்கள் நேற்று இரவுவரை வெளியாகவில்லை. (த)

## வாகரை, வெருகல் பகுதிகளில் நேற்றும் விமானத் தாக்குதல்

கொழும்பு, ஜன.17

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாகரை மற்றும் திருகோணமலை மாவட்டத்திலுள்ள வெருகல் பகுதிகளில் விமானப்படையினர் நேற்றுத் தாக்குதல் நடத்தினர் என்று பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று முற்பகல் 9 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

கல்லாறு, மஹிந்தபுர, சேருநுவர ஆகிய

(04 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா அரச செயலக வளாகத்தில் கிளைமோருக்கு இரு பொலிஸார் பலி!

### மோட்டார் சைக்கிளில் பொருத்திய குண்டே வெடித்தது

வவுனியா, ஜன.17

வவுனியா மாவட்ட செயலகத்தின் வளாகத்தினுள் நேற்றுக்காலை 8 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர் குண்டு வெடிப்பில் இரு பொலிஸார் உயிரிழந்தனர். அரச செயலகத்தின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் பொலிஸாரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கடத்திச் செல்லப்பட்டிருந்த ஒரு 'ஸ்கூட்டி' ரக மோட்டார் சைக்கிளில் கிளைமோர் குண்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலை. கல்விச் செயற்பாடுகள் 22ஆம் திகதி ஆரம்பிக்கப்படமாட்டா

### வசதிகள் ஏற்பாடுகளைச் செய்வதில் தாமதம்

யாழ்ப்பாணம்,ஜன.17

வேண்டிய வசதிகளையும், ஏற்பாடுகளையும் செய்வதில் தாமதம் உண்டாவதால், யாழ்.பல்கலைக்கழகத்தை உத்தேசித்தவாறு இம் மாதம் 22ஆம் திகதி ஆரம்பிப்பது சாத்தியமாகாது.

பதில் துணைவேந்தர் பேராசிரியர் இ. குமாரவடிவேல் இத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கற்றற் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கான முன்னேற்பாடுகள் துரிதகதியில் மேற்கொள்ளப்படுகின்றன.

இருந்தபோதும் போதிய தரவுகள் தரப்படாமையால் வெளிமாவட்ட மாணவர்களின் பட்டியலைத் தயாரித்தலில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவும் மாணவர் வதிவிடங்களாக உபயோகிக்க தனியார் கட்டடங்களைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட நடைமுறைச் சிக்கல்கள் காரணமாகவும் முன்னர் அறிவித்தபடி ஜனவரி மாதம் 22ஆம் திகதி கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிப்பது சாத்தியமாகாது.

எனினும் இயன்றளவு விரைவில் ஒரு சில வாரங்களுள் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும். ஆரம்பிக்கப்படும் புதிய திகதிகள் விரைவில் அறிவிக்கப்படும் - என்றுள்ளது. (அ-1)

## முஸ்லிம் காங்கிரஸின் 9 நிபந்தனைகளும் ஏற்பு நான்கு அமைச்சுப் பதவிகளும் வழங்கத் தயார்!

கொழும்பு, ஜன.17

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை அரசுடன் இணைவதற்குத் தீர்மானித்திருப்பதாகவும், அக்கட்சிக்கு நான்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட இருக்கின்றன என்றும் அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சரவை அந்தஸ்துள்ள ஓர் அமைச்சும், அமைச்சரவை அந்தஸ்தற்ற இரண்டு அமைச்சுகளும், ஒரு பிரதி அமைச்சும் அக்கட்சிக்கு வழங்கப்பட இருக்கின்றன.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சை பஷீர் சேகுதாவூத்தும், அமைச்சரவை அந்தஸ்தற்ற இரண்டு அமைச்சுகளில் ஒன்றை எம்.ரி. ஹஸன் அலியும் மற்றையதை கே.ஏ.பாயிஸும், பிரதி அமைச்சுப் பதவியை பைஸல் காஸிமும் ஏற்பார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமும், எஸ்.நிஜாமுதீனும் அமைச்சுப் பதவிகளை ஏற்பதில்லையெனத் தீர்மானித்திருக்கிறார்கள் என்று தெரியவருகின்றது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸின் முடிவு ரணில் கவலை தெரிவிப்பு

கொழும்பு, ஜன.17

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அரசுடன் இணைவதால் தாம் மிகுந்த கவலையும், வேதனையும் அடைகிறார் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில் ராஜபக்ஷவிடம் கூறியிருக்கின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் நீண்ட கால

(04 ஆம் பக்கம் பார்க்க)

## கொள்ளை, திருட்டுக்களைத் தடுப்பதற்கு படையினருடன் தொடர்பு கொள்ளலாம்

### தொலைபேசி இலக்கங்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.17

குடாநாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெறும் கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களைத் தடுப்பதற்கு உடனடியாக அருகில் உள்ள படை முகாம்களுக்கு தகவல் தருமாறு பாதுகாப்புத் தலைமையகம் கேட்டுள்ளது.

ஊரடங்கு நேரங்களில் இடம்பெறும் கொள்ளைகள் மூலம் படையினருக்கு அபகீர்த்தி ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப் படுகின்றன என்றும் -

கொள்ளையில் ஈடுபடுபவர்களைக் கைதுசெய்ய வசதியாக கொள்ளை முயற்சி இடம்பெறும்போது படையினருக்கு தகவல் தரும்படியும் - தலைமையகம் கோரியுள்ளது.

கீழ்வரும் பிரதேச மக்கள் குறிப்பிடப்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## ரவிராஜ் படுகொலை வழக்கில் சந்தேகநபர்கள் மூவர் ஆஜர்

கொழும்பு, ஜன. 17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் கொலை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் மூன்று சந்தேகநபர்கள் நேற்று குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கொழும்பு மேலதிக நீதிவான் முஹமட் இஸ்ஸதீன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இச்சந்தேக நபர்களின் தடுப்புக்காவல் உத்தரவுக் காலம் முடிவடையாததால் மேலதிக

(04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கலாலயா
பயிற்சியகம்

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

- 40 வகை கூந்தல் அலங்காரங்கள் - **1 மாதம்/3 மாதம்**
- Fabric Painting, பூ வேலை, கைவேலை - **3 மாதம்**
- **Facial & Dressing**, சாறி பிளவுஸ், பஞ்சாபி, **Skirts, Blouses**, முழுச்சட்டை, **Nighty & Overcoat** தைத்தல் - **2 வாரம்**
- புதிதாகத் தையல் பழக விரும்புவோருக்கான தையல் வகுப்புகள் - **6 மாதம்**

**சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம் :- 21-01-2007**
**கிழமை நாள் வகுப்புகள் ஆரம்பம்:- 22-01-2007**

மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

பதிவாளர்.


## தவறிவிட்டது

15.01.2007 அன்று மா.ஞானப்பிரகாசம் ஆகிய எனது மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் யாவும் யாழ். ஆயர் இல்லம் அமைந்துள்ள பகுதிக்கும் பிரதான வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், தயவுசெய்து யா/புனித சாள்ஸ் மகா வித்தியாயத்தில் ஒப்படைக்கவும்.

தொடர்பு:
077 6528684

## ஓராண்டு நினைவஞ்சலி



**அமரர் கதிரேசு தங்கராஜா**

எமக்காக 1944.05.10    ஆண்டவனுக்காக 2006.01.27

திதி : திரயோதசி

உங்கள் உருவம் நாம் தொலைத்து
ஓராண்டுகளானாலும்
பிரியமான எங்கள் அப்பா
நிஜத்தில் பிரித்தாலும்
நிழலாக எமைச் சொ... உங்கள் ...
நம் நினைவுகளில் பிரியாதிருக்கும் உங்கள்
ஆத்மா சாந்தி பெறுவதாக!

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

(57126)    - குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



**திருமதி கதிரேசு ஆச்சிமுத்து**

திதி: திரயோதசி

மனம் மகிழ 27.09.1945    மனம் நெகிழ 27.01.2006

ஆண்டு ஒன்று சென்றும்
அணையா நினைவாய் நிறைந்தீர்

என்றும் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
சகோதரர், பேரமக்கள்,
மருமக்கள், மச்சாள்மார்.

'மோகனம்', இராமலிங்கம் வீதி,
கல்வயல், சாவகச்சேரி.    (57113)

## 8ஆம் ஆண்டு    4ஆம் ஆண்டு



மலர்வு 03.09.1929    உதிர்வு 05.12.1998

**அமரர் மூத்தார் சின்னத்துரை**
(செல்லமணி)
ஓய்வுபெற்ற கா.சீ.கூ. ஊழியர்)
திதி: திருதியை 07.12.2006



மலர்வு 26.04.1949    உதிர்வு: 31.01.2003

**திருமதி புவனேஸ்வரி சின்னத்துரை**(சோதி)
திதி: சதுர்த்தசி 17.01.2007

அன்புத் தெய்வங்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
நி.மு. : இன்னாவத்தை, கொல்லங்கலட்டி
த.மு. : மானிப்பாய் - மருதனார்மடம் வீதி,
உடுவில்.

என்றும் எம் தெய்வங்களின்
நினைவில வாடும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 95ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு

**தவராசா குணதிபன்**

பிறப்பு 29.02.1984    இறப்பு 14.10.2006



நாள்கள் பல ஆனாலும்
என்றும் உன் நினைவுகளுடன் நாம்

ஆஸ்பத்திரி அருகாமை,
கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை.

தகவல்:
மு.தவராசா, சந்திரகுமாரி,
சிவரஞ்சினி (மனைவி).

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**சூசைப்பிள்ளை அக்னெஸ்**

மலர்வு 28.12.1929    உதிர்வு 18.12.2006

அன்போடும் பாசத்தோடும் எம்மோடு இணைந்து பண்புடன் வாழ்ந்தும் இன்று நல்ல நிலையில் நாமிருக்க தன்னுடலை உரமாக்கிய எம் இனிய அம்மாவே நீங்கள் குடும்ப விளக்காக பிரகாசித்து நடமாடிய வீட்டில் படமாக காட்சியளிக்கின்றீர்கள் நீங்கள் எம்மை விட்டு மறைந்து போனாலும் உங்கள் நினைவுகள் என்றும் மாறாது.

இல. 118, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 27 - 10 - 1942



மறைவு 19 - 12 - 2006

(57017)

**அமரர் செல்லமுத்து விநாயகமூர்த்தி**

திதி : அபரபக்க சதுர்த்தசி

கடந்த 19.12.2006 அன்று அமரத்துவம் அடைந்த குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் தொலைபேசி, தந்தி மற்றும் வேறு வழிகளிலும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் பல்வேறு வழிகளில் உதவிய அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (17.01.2007) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'திருவரங்கம்',
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

மனைவி, பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**சண்முகதாசன் இராசலட்சுமி**

தோற்றம் 07.10.1931
மறைவு 16.12.2006

அன்புச்சுடரே குடும்பக் குல விளக்கே
ஆலமரமாய் நிழல் தந்து எம்மைக் காத்த
அன்னையே உமது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று 17.01.2007 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

துணவி,
வட்டுக்கோட்டை.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



கடந்த 18.12.2006ஆம் திகதி சிவபதம் அடைந்த எமது குடும்ப விளக்கு

அமரர்
**அரியமுத்து வெற்றிவேல்**

தோற்றம் : 1936.06.03
மறைவு : 2006.12.18

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (17.01.2007) புதன்கிழமை முற்பகல் அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

ஏழாலை தெற்கு,
மயிலங்காடு.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### நல்லதம்பி ஞானசிலன் (கர்ணா)



தமிழ் மிஷன் சபை உப போதகர் நல்லதம்பி ஞானசீலன் 13.01.2007 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரது அடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை ஏனைய சபை போதகர்கள், ஊழியர்கள், விசுவாசிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

86/7,ராஜசிங்கம் வீதி,
திருநகர்,
யாழ்ப்பாணம்.    (57114)

தகவல்:
தமிழ் மிஷன் சபை,
மாம்பழம் சந்தி,
அரியாலை.

### திருமதி கந்தப்பிள்ளை நவமணி



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தப்பிள்ளை நவமணி நேற்று (16.01.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பிள்ளையின் மனைவியும் காலஞ்சென்ற நாகேந்திரம் - அழகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற கொத்தர் - சீதையின் மருமகளும் காலஞ்சென்ற தருமலிங்கம், நவரத்தினமணி, நவலோகபுஷ்பமணி, நவநாயகமலர் ஆகியோரின் சகோதரியும் ஆனந்தராசா (தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ்.கச்சேரி), சிறிஸ்கந்தராசா (பொறியியலாளர்), சிறிஸ்லங்கராசா (இராசக்கோன்), சிறிஸ் ரவீந்திரராசா ஆகியோரின் தாயும் பரமேஸ்வரி, சியாளா, விஜயகுமாரி, நித்தியா ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (17.01.2007) பி.ப ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம், கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
[illegible]
S.T.N. [illegible]
சந்தை அருகில், சுன்னாகம்.

## 31ஆம்நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் வைத்திய கலாநிதி
**அதிரியான் பேதுரு அருளப்பன்**
(D.A.M. & D.I.M.S.)

மண்ணுலகில்: 22.03.1922    விண்ணுலகில் :19.12.2006

"ஆண்டவருக்குள் இறப்போர் பேறு பெற்றோர்
ஏனெனில் அவர்கள் செய்த நன்மை அவர்களை
- பின் தொடரும்"

எமது அன்புத் தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு இறுதி அஞ்சலியில் கலந்துகொண்ட அனைவருக்கும், கண்ணீரஞ்சலி செலுத்திய யா/ஸ்கந்தவரோதய கல்லூரி சமூகத்தினருக்கும் இரங்கல் திருப்பலியை நிறைவேற்றிய அருட்தந்தை அவர்கட்கும் எமக்கு பலவழிகளில் உதவியவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளை நவில்கின்றோம்.

நாளை (18.01.2007) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்துகொண்டு அவருடைய ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்க வேண்டுகிறோம்.

அருள் வைத்தியசாலை, சுன்னாகம்.    தகவல்: பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் **இரத்தினம் விஜயரத்தினம்**
(நயினை விஜயன், இளைப்பாறிய
முகாமையாளர், இலங்கை வங்கி)

மனம் மகிழ 08.02.1946    மனம் நெகிழ 18.12.2006

18.12.2006 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு எமது துக்கத்தில் பங்குகொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (17.01.2007) புதன்கிழமை மு.ப10மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.    (57110)    குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் பாச நினைவுகள்



"இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய் என்று உறுதியாக உனக்கு சொல்கிறேன்"    (லூக்கா 23:43)

**அமரர் ஜோசப் ஜோர்ஜ் அந்தோனிப்பிள்ளை**
(Rtd. CTB CONDUCTOR)

மண்ணில்: 22.04.1939    விண்ணில்: 19.12.2006

"சிங்கத்தின் குரல் ஓய்ந்தது, மந்தகாசப் புன்னகை மறைந்தது
விழுதுவிட்ட ஆலமரம் வேரோடு சாய்ந்தது.
மணவாழ்வின் சுமைகளால் புது வாழ்வு தேடி விண்ணகம் சென்றீரோ!
வேதனைகளை மறந்து சாதனைகள் செய்ததை நீர் வாழ்ந்த ஊரவர்கள் கூறுவதை நீர் அறிவீரோ!
பாசத்தின் விலை என்ன என்று பகர மீண்டும் ஒரு முறை வாரும் ஐயா!"

அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றலுக்காக 16.01.2007 செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை 4ஆம் குறுக்குதெரு சென். அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெற்ற நன்றித் திருப்பலியில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றியை தெரிவிப்பதுடன் நாளை (18.01.2007) வியாழக்கிழமை இல்லத்தில் நடைபெறும் மதிய போசன உபசாரத்தில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மு.கு: 20.12.2006 அன்றைய சம்பவம் காரணமாக உடனடியாக அறிவித்தல் கொடுக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

இந்த அழைப்பை நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சேவில் ஒழுங்கை,
தும்பளை மேற்கு, பருத்தித்துறை.    (அ/51048)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினரும்
உடன் பிறந்தோரும்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**சங்கரப்பிள்ளை செல்லம்மா**

உதிப்பு 25.11.1925    உதிர்வு 18.12.2006

அன்புடன் அரவணைத்து வளர்த்த அன்னையே!
ஆறுதல் தர யாருமில்லையே
பாசமுடன் பாதுகாத்து - எம்மை
பரிதவிக்க விட்டுச் சென்றாயே
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது நின் பிரிவுத்துயர்.

ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மீசாலை வடக்கு,
மீசாலை.    (அ/51843)

## 6ஆம் மாத நினைவஞ்சலி



அமரர்
**தவராஜசேகரம் தவச்செல்வன்**

தோற்றம் 02.01.1978    மறைவு 22.07.2006

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் மணி விளக்காய்
வானுலகு போகும் வரை வறுமையே அறியாளாய்
இழந்தோம் உனை நாமின்று நெஞ்சில் இருத்தி
உனை நித்தம் பூசித்து எம் கண்ணீர்ப்பூக்களைக்
காணிக்கையாக்குகின்றோம்.

க.தவராஜசேகரம்,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.    (57021)

- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

# மீண்டும் பூஸா என்ற பூதம்

பயங்கரவாதத் தடுப்பு சட்டம் (?) மீண்டும் தமிழர்கள் மீது வரன் முறையற்று ஏவிவிடப்பட்டிருக்கின்றது. இம்முறை அது அந்தப் பெயரில் வரவில்லை. புதுப்பெயருடன், புதுவடிவில் பாய்கிறது அது.

அந்தச் சட்டத்திலிருக்கும் அம்சங்கள், அவசரகாலச் சட்ட விதிகளின் ஏற்பாடுகள் வடிவத்தில் தமிழர் மீது திணிக்கப் பட்டிருக்கின்றன.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் என்ற பெயரில் ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டு, பின்னர் நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட விசேட ஒழுங்கு விதிகளின் ரூபத்தில் அவை வந்திருக்கின்றன.

2006 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க அவசரகால (பயங்கரவாதத்தையும், குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாதச் செயற்பாடுகளைத் தடுத்தலும், தடை செய்தலும்) பற்றிய ஒழுங்கு விதிகள் என்ற பெயரில் தமிழர்களுக்கு எதிரான அரச அடக்குமுறைக்கெடுபிடியை ஏவிவிடும் இந்த ஒழுங்குவிதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் நிறுத்தத்துக்கு வழிசெய்யும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தமிழர்களுக்கு எதிராக நடவடிக்கை ஏதும் எடுக்கப்படமாட்டாது என்று இலங்கை அரசு உறுதியளித்திருக்கின்றது.

யுத்த நிறுத்த உடன்பாட்டு ஏற்பாடுகளைத் தூசென மதித்து, தனது போர் முனைப்புப் போக்கைத் தீவிரமாக முன்னெடுத்து, அதன் காரணமாக அந்த உடன்படிக்கையைச் செல்லாத ஆவணமாக்கியிருக்கும் இலங்கை அரசுத் தரப்பு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எதையும் எடுப்ப்தில்லை என்று அந்த உடன்பாட்டின் மூலம் தான் வழங்கியிருக்கும் உறுதிமொழியையும் வழமைபோல மீறிச் செயற்படுகின்றது.

அதற்காக -

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் விதிகளைச் சற்று மாற்றி, அவசரகால நிலைமையைப் பயன்படுத்தி, பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அவற்றைப் புகுத்தியுள்ளது.

ஆக, தமிழர்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட அதே கண்மூடித்தனமான கைது, கேட்டுக் கேள்வியின்றி - நீதிமன்றில் விசாரணைக்கு உட்படுத்தாமல் - நீண்ட காலத்துக்குத் தடுப்புக் காவலில் தடுத்து வைத்தல் போன்ற அடிப்படை மனித உரிமைகளை மீறும் கொடூரங்கள், அராஜகங்கள் என்பன இப்போது அவசரகாலச் சட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படுகின்றன.

சட்ட ஆட்சியின் நீதி, நியமங்களை உதாசீனப்படுத்துவனவாக இலங்கையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் ஏற்பாடுகள் கோலோச்சுகின்றன என்று பல்வேறு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் நீண்ட காலமாகப் பலத்த குரலை எழுப்பிய போதிலும் கடந்த 27 ஆண்டுகளாக அச்சட்டத்தின் கெடுபிடி ஏற்பாடுகள் நடை முறைப்படுத் தப்பட்டு தமிழர் மீது திணிக்கப்பட்டே வந்திருக்கின்றன.

நீதி, நியாயம், கௌரவ வாழ்வு மறுக்கப்பட்ட தமிழர்கள், தமது உரிமைகளுக்கான போராட்டத்தை ஆயுத வழிக்குத் திருப்பியதை அடுத்தே, மிகமோசமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தமிழினத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டது.

ஒருபுறம், எதற்காக - என்ன காரணத்துக்காக - தமிழர்கள் ஆயுதம் ஏந்திய போராட்டத்தை ஆரம்பித்தார்களோ அவற்றை மேலும் நியாயப்படுத்துவன போல பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற பெயரில் திணிக்கப்பட்ட இராணுவக் கெடுபிடிகள் விளங்க, மறுபுறம் அந்தக் கெடுபிடிகளும், கொடூரங் களும் தமிழரின் ஆயுதம் தரித்த எதிர்ப்பியக்கத்தைத் தீவிரப்படுத்தி வைக்கவும் தவறவில்லை.

சற்று விரிவாக நோக்கினால், எந்த இலக்கோடு இந்தச் சட்டத்தை முன்னைய சிங்கள அரசுகள் கொண்டு வந்தனவோ, அந்த நோக்கை அடைவதற்கு அந்தச் சட்ட விதிகள் உதவவில்லை என்பதே உண்மை. மாறாக, அவை அந்த இலக்குகளுக்குத் தலைகீழான விடயங்களை எட்டவே வழி செய்தன.

இந்த உண்மையை - மெய்மை நிலையை - புரிந்து கொள்ளாத தென்னிலங்கை, திரும்பவும் 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற பாணியில் அந்தச் சட்டத்தில் விவரிக்கப்பட்ட கெடுபிடி நடவடிக்கைகளை - அடிப்படை மனித உரிமைகளுக்கு முற்றிலும் மாறான செயற்பாடுகளை - அவசரகால விதிகளின் கீழ் தமிழர்கள் மீது அவிழ்த்து விடுகின்றது. தமிழரின் ஆயுதம் தாங்கிய எதிர்ப்பியக்கத்தின் தீவிரத்தை எதிர்கொள்ள இயலாத - அல்லது அந்த எதிர்ப்பியக்கத்தினால் ஏற்பட்ட விரக்தி மற்றும் ஆதங்களினால் - சர்வதேச சட்ட நியமங்களுக்கு முற்றிலும் மாறான இந்தக் கெடுபிடிச் சட்டங்களைத் தமிழர்கள் மீது மீள ஏவிவிடும் நிலைமைக்குத் தென்னிலங்கை போயிருக்கின்றது.

தென்னிலங்கையில் சிக்கும் தமிழர்களை எல்லாம் 'சந்தேகம்' என்ற பெயரோடு கைது செய்து நீண்ட காலம் கேட்டுக் கேள்வியின்றிச் சிறையில் தடுத்து வைக்கும் - ஏற்புடைய பொதுவான சட்ட நியமங்களுக்குப் புறம்பான - அடக்குமுறைப்போக்குக்கு இந்தச் சட்டவிதிகள் தாராளமாக இடமளிக்கின்றன.

இந்த அதிகாரம் தமக்குக் கிட்டியதும் அவற்றைப் பயன்படுத்தித் தமது கைவரிசையைப் பெரும்பாலும் அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடத் தொடங்கி விட்டன தென்னிலங்கையின் சீருடைப் படைகள்.

பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் - வடக்கு, கிழக்கை மட்டுமல்ல, தென்னிலங்கையையும், மலையகத்தையும் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் கூட - இந்தச் சட்டவிதிகளின் கீழ் 'சந்தேகத்தின் பேரில்' கைது செய்யப்பட்டு, 'சந்தேகத்தின் பேரில்' மாதக் கணக்கில் தடுத்து வைக்கப்படுவதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு கைது செய்யப்படுவோர், தடுத்து வைக்கப்பட்டு, 'உரிய முறையில் உபசரிக்கப்பட்டு', விசாரணை செய்யப்படுவதற்காகவே பூஸா வதை முகாம் மீண்டும் திறக்கப்பட்டிருக்கின்றது என்ற உண்மையும் வெளியாகியிருக்கின்றது. ஏற்கனவே நானூறுக்கும் அதிகமான தமிழர்கள் இந்த முகாமுக்கு அனுப்பப்பட்டு விட்டனர். 1987 இல் யாழ். குடாநாட்டின் வடமராட்சியில் அரச படைகள் மேற் கொண்ட 'ஒப்பரேஷன் லிபரேஷன்' நடவடிக்கையை அடுத்து அப் பிரதேசத்திலிருந்த தமிழ் இளைஞர்கள் அனைவரும் கூண்டோடு கைது செய்யப்பட்டு, கப்பலில் ஏற்றப்பட்டு, தெற்குக்குக் கூட்டி வரப்பட்டு ஒரே இடத்தில் தடுத்து வைக்கப்பட்டதோடு பூஸா வதை முகாமின் கொடூர - அராஜக - சரித்திரம் ஆரம்பமானது.

அந்தக் கொடூரச் சரித்திரத்தின் மற்றொரு அங்கம் - அத்தியாயம் - இப்போது எழுத ஆரம்பிக்கப்பட்டிருப்பதை பூஸா தடுப்பு முகாம் மீளத் திறக்கப்பட்டிருக்கின்றமை காட்டுகிறது.

# தூர இடங்களில் இருந்து நகருக்கு பஸ்களில் வரும் மாணவர் சிரமம்

## பாடசாலைக்குத் தொலைவில் இறக்கப்படுகின்றனர்

யாழ்ப்பாணம்,ஜன.17

குடாநாட்டில் பாடசாலைச் சேவைகளில் ஈடுபடும் போக்குவரத்துச் சபை பஸ்களில் பயணம் செய்யும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை வருவதற்காகத் தூர இடங்களில் இருந்து பஸ்களில் பயணம் செய்யும் மாணவர்கள் நகரப் பகுதியில் இப்போது பஸ் நிலையத்திலேயே இறக்கப்படுகின்றனர்.

இதற்கு முன்னர் பஸ்களில் நகரப் பாடசாலைகளுக்கு வரும் மாணவர்கள் பாடசாலைகளுக்கு முன்பாக இறக்கப்பட்டு வந்தனர்.

ஆனால் இப்போது திடீரென மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களால் மாணவர்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் - என்று பெற்றோர்கள் மேலும் கவலை தெரிவிக்கின்றனர்.

முன்னர் மாணவர் பஸ்களில் இலவசமாக பயணம் செய்தனர். ஆனால் இந்த மாதம் தொடக்கம் சலுகைக்கட்டணத்துடன் வழங்கப்படும் பருவகாலச்சீட்டுக்களை வாங்கியே பயணம் செய்கின்றனர் என்பதையும் பெற்றோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை - பாடசாலை பஸ் சேவைகள் போதிய உதிரிப் பாகங்கள் இன்மையால் குறைக்கப்பட்டுள்ளன என்று கோண்டாவில் டிப்போ வட்டாரங்கள் தெரிவித்தன.இது தொடர்பான உறுதிப்படுத்தப்பட்ட விவரங்களைப் பெறுவதற்கு உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொள்ள முயன்ற போதிலும் அது கைகூடவில்லை. (அ-1-11)

# ஒரு மாதகால இடைவெளியில் 2 ஆவது தடவையாகக் கொள்ளை

## நகரின் மத்தியில் உள்ள புடைவைக்கடையில்

யாழ்ப்பாணம், ஜன.17

யாழ். நகரப்பகுதியில் அமைந்துள்ள பிரபல புடைவைக் கடை ஒன்றில் சுமார் 25 லட்சம் ரூபா பெறுமதியான புடைவைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அதன் உரிமையாளர் யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பந்தப்பட்ட இதே புடைவைக் கடையில் கடந்த ஒரு மாதகால இடைவெளியில் இடம் பெற்ற இரண்டாவது கொள்ளைச் சம்பவம் இதுவாகும்.

கடந்த டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதியும் இந்தக் கடையில் சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான புடைவைகள் கொள்ளையிடப்பட்டிருந்தன.

யாழ். நகரில் - மின்சார நிலைய வீதி யில் - பஸ் நிலையத்துக்கு சமீபமாக உள்ள இந்தப் பிரபல புடைவைக் கடையின் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் அங்கிருந்த பெறுமதியான கூறைச்சேலைகள், பஞ்சாபிகள், வேட்டிகள், டெனிம் ரவுசர்கள், சேலைகள் உட்பட பல பெறுமதி மிக்க புடைவைகளை மூடைகளாகக் கட்டிச் சென்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமையும், மறுநாள் திங்கட்கிழமையும் விடுமுறை தினங்களாக இருந்தமையால் கடை திறக்கப்படவில்லை. இதன் காரணமாக எப்போது இந்தத் திருட்டு இடம் பெற்றது என்று தெரியவரவில்லை.

கொள்ளையர்கள் திருடிச் சென்ற புடைவைகளில் மூன்று மூடைகள் அந்தக் கடையின் பின்புறமாகத் திருடர்களால் கைவிட்டுச் செல்லப்பட்டுள்ளது.(அ-8)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் ஆணைக்குழுவிடம் நேற்று சரண்

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து குடும்பம் ஒன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சரணடைந்துள்ளது.

உடுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த தந்தை, தாய், மகள் ஆகியோரே குடும்பமாக மனித உரிமைகள் ஆணைக் குழுவில் சரணடைந்துள்ளனர்.

இவர்களை பாதுகாப்பாகத் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

அடையாளம் தெரியாத ஆயுத தாரிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி தாம் காயம் அடைந்திருந்தார் என்றும - கடந்த வெள்ளிக்கிழமை தனது கணவர் தாக்கப்பட்டதாகவும் - சரண் அடைந்த பெண் தெரிவித்துள்ளார்.

பிரஸ்தாப பெண் தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். (அ-8)

# பஸ் பயணிகளே கவனம்!

## முடிச்சு மாறிகள் நடமாடுகின்றனர்!!

யாழ்.பயணிகளே கவனம். பஸ்களில் பயணம் செய்யும்போது நீங்கள் எடுத்துச் செல்லும் பொருள்களைக் கவனமாகப் பாது காத்துக்கொள்ளுங்கள். இல்லையேல் அவற்றை முடிச்சுமாறிகள் கையாடிச் சென்று விடுவார்கள்.

யாழ்.நகர பஸ் வண்டிகளில் முடிச்சு மாறி களின் தொலை அதிகரித்துள்ளது.

குடாநாட்டில் பல பாகங்களிலிருந்து யாழ்.நகரப் பகுதிக்குள் பிரவேசிக்கும் பேருந் துகளில் பிரயாணிகளின் எண்ணிக்கை இப் போது அதிகரித்துள்ளது.

அதனைச் சாதகமாகப் பயன்படுத்தும் முடிச்சு மாறிகள் தமது கைவரிசையைக் காட்டுகின்றனர்.

இதனால் பஸ் பிரயாணிகள் தமது பெறு மதியான பொருள்களையும் மற்றும் பணத் தையும் முடிச்சு மாறிகளிடம் பறி கொடுக்க நேர்கிறது.

பஸ்களில் அடிக்கடி நடைபெறும் இத்தகைய சம்பவங்களுக்குச் சிகரம் வைத்தால் போன்று நேற்றைய தினம் சில்லாலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்ட பஸ் ஒன்றின் நடத்துநரின் கைத் தொலைபேசி பறிபோனது.

நடத்துநருக்குப் பின்னாலிருந்த பெண் ஒருவர் அவரது கைத் தொலைபேசியை லாவகமாக அபேஸ் செய்து கொண்டு தலை மறைவாகிவிட்டார்.

சற்று நேரம் கழித்தே பஸ் நடத்துநர் தமது கைத் தொலைபேசி காணாமற் போனதை உணர்ந்தார். ஆனால் அதற்கு முன்பே மேற் படி பெண் பஸ்ஸிலிருந்து இறங்கிச் சென்று விட்டார். (அ-79)

## நாளை

தை - 04
வியாழக்கிழமை
18.01.2007
திதி : சதுர்த்தசி
முற்பகல் 11.28
நட்சத்திரம் : பூராடம்
முன்னிரவு: 08.28 வரை
அமாவாசை விரதம்
சுபநேரம் : 08.05 - 09.35
ராகுகாலம் : 02.05 - 03.35

# குடாநாட்டின் குட்டிச் செய்திகள்

## யாழ். இளைஞர் ஐவர் கொழும்பில் கைது என முறைப்பாடு

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஐவர், கொழும்பில் தங்கியிருந்த வேளை படையினர் மற்றும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர்களின் உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவர்கள் தொடர்பான விவரங்களைப் பெற்றுத் தரும்படி உறவினர்கள் மனித உரிமை ஆணைக்குழுவிடம் கோரியுள்ளனர்.

ச.யோகராசா (வயது-43), சி.சசிப்பிரியா (வயது-19), சு.சுதர்சன் (வயது -21), த.பிரதீபன், இ.குணராசா ஆகியோரே கொழும்பில் தங்கியிருந்த வேளை வெவ்வேறு இடங்களில் வைத்து பொலிஸார் மற்றும் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக முறைப்பாடு களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-8)

## கெற்பேலிக்கு மீண்டும் மினிபஸ் சேவை

தென்மராட்சி சிற்றூர்தி சேவைகள் சங்கத்தினர் கெற்பேலியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான மினிபஸ் சேவையினை மீண்டும் நேற்றுமுன் தினம் ஆரம்பித்துள்ளனர்.

தினமும் காலை 7.20மணிக்கு கெற்பேலியிலிருந்து புறப்படும் மினி பஸ் கச்சாய், சாவகச்சேரி ஊடாக யாழ்ப் [illegible] பகல் ஒரு மணிக்கு [illegible] இதே மார்க்கமாக கெற்பேலிக்கும் செல்லுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேலாயுதம் ம.வியில் மாணவர்கள் பகிஷ்கரிப்பு

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் மாணவர்கள் நேற்று வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அப்பாடசாலையின் பாடசாலை முதல்வர்களில் ஒருவரான பரஞ்சோதி தனஞ்சயன் கடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படும் சம்பவத்தை அடுத்தே இப் பகிஷ்கரிப்பு இடம்பெற்றதாக அறியப் பட்டது.

மாணவர்களை விடுவிக்கும்வரை தொடர்ந்து பகிஷ்கரிப்பில் ஈடுபடப் போவதாக மாணவர்கள் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-1-115)

## கோப்பாயில் மருத்துவ முகாம்

கோப்பாய் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இலவச மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது.

இம் மருத்துவ முகாமில் யாழ். மாவட்ட விசேட மருத்துவ நிபுணர்களின் சேவையும் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீருடைகள் வந்து சேர்ந்தன

குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கென 4 ஆயிரத்து 250 பொதிகளில் ஒரு லட்சத்து 41 ஆயிரம் சீருடைகள் கப்பலில் எடுத்துவரப்பட்டன. யாழ். அரச அதிபர் இதனை கல்வித் திணைக்களத்துக்கு [illegible]ளார். ஆரம்பப்பிரிவு,இடைநிலைப்பிரிவு ஆகியவற்றில் கல்வி பயிலும் மாணவர்களுக்குரிய சீருடைகளே எடுத்துவரப்பட்டுள்ளன. (1-வ)

## சாவகச்சேரியில்கல்வி நிறுவன உரிமையாளர் சுட்டுக்கொலை

சாவகச்சேரி நகரப்பகுதி தனியார் கல்வி நிறுவன உரிமையாளர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் அவரது வீட்டில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று மு.ப.10 மணியளவில் இடம்பெற்றது.

சாவகச்சேரி ஞானோதயா அக்கடமி உரிமையாளரும், சாவகச்சேரி சப்பச்சி மாவடியைச் சேர்ந்தவருமான ஆறுமுகம் மார்க்கண்டு (வயது-60) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

## மட்டுவிலில் துப்பாக்கிச்சூடு: இருவர் காயம்

மட்டுவில் சந்திப் பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணியளவில் இடம் பெற்றது. அப்பகுதி கடையொன்றில் பொங்கலுக்குரியபொருள்கள் வாங்குவதற்கு நின்ற மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த பொன்னர் வேலாயுதம் (வயது -65) , தங்கவடிவேல் சுகிர்தன் (வயது -24) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.இவர்கள் யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல் லப்பட்டனர்.

## கிளைமோர் மீட்பு

மீசாலை பங்களா வீதியில் கிளைமோர் குண்டுஒன்று படைத்தரப்பினரால் நேற்றுமுன்தினம்மீட்கப்பட்டுள்ளது.பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்துஅப்பகுதியில்உள்ள மின்மாற்றிக்கு அருகில் இக்குண்டு மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரவிராஜ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளுக்காக அவர்கள் மீண்டும் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக் கப்பட்டனர்.

ரவிராஜின் குடும்பத்தாரின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.வி. தவராஜா, ரவிராஜின் ஜீப் வண்டி நிபந்தனைகளின் அடிப் படையிலேயே அவரது மனைவியிடம் நீதிமன்றத்தால் ஒப்படைக் கப் பட்டது என்றும் அந்நிபந்தனையை நீதிமன்றம் இரத்துச் செய்ய வேண்டும் என்றும் கோரினார்.

நீதிமன்றில் ஆஜரான குற்றப் புல னாய்வுத்துறையினர், ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸார்ரவிராஜின்ஜீப்வண்டியைப்பரி சோதித்தனர் என்றும், துப் பாக்கி மற்றும் ரவை போன்ற பொருள்க ளைச் சோதனைக்காக அவர்கள் தங்களு டன் எடுத்துச் சென்றுள்ளனர் என்றும் தெரிவித்தனர்.

தடயப் பொருள்களின் பரிசோதனை முடிந்ததன் பின்னர் அவர்கள் ஒரு மாதத் திற்குள் இலங்கை வருவார்கள். மீண்டும் அந்த ஜீப் வண்டியைப் பரிசோதிக்க உள்ள னர். ஆகவே, ஜீப் மீதான நிபந்தனை களை நீக்குவது புலன் விசாரணையைப் பாதிக் கும் என்று புலனாய்வுத்து[illegible]யினர் மேலும் கூறினர்.

அதனைச் செவிமடுத்த நீதிவான், ரவிரா ஜின் ஜீப் மீதான நிபந்தனைகள் நீக்கப்[illegible] கூடாது என்பதற்கான காரணத்தை விளக்கி நீதிமன்றில் விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு புலனாய்வுத் துறையின ருக்கு உத்தரவிட்டு வழக்கை ஒத்தி வைத் தார்.

## வாகரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களில் தாக்குதல்களை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் ஏற்பாடுகளை மேற் கொண்டுவந்தனர் என்றும் - அவர்களது அந்த நிலைகள் மீதே விமானப்படையினர் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## வடமராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டும் ஊரடங்குச் சட்டம் வடமராட்சியில் மாலை6 மணிக்கும் ஏனைய பகுதிகளில் மாலை 7 மணிக்கும் நடைமுறைக்கு கொண்டுவரப்படும் என்று தெரிவிக்கப் பட்டது. (அ-1)

## முஸ்லிம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக ஒட்டி உறவாடிய கட்சி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்னிடம் ஒரு வார்த்தையேனும் கூறாமல் அக்கட்சி அரசுடன் இணைவதையிட்டு நான் மிகவும் கவலைப்படுகின்றேன் என்றும் ரணில் கூறியிருக்கிறார்.

இந்தச் செய்தியை பஸில் ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எம்.பி. பஷீர் சேகுதாவுத்திடம் கூறியிருக்கிறார். ரணில் எமக்குச் செய்ததையே நாம் அவருக்கு செய்தோம் என்று பஷீர் எம்.பி., பஸில் ராஜபக்ஷவிடம் கூறினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## முஸ்லிம் காங்கிரஸின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவை தவிர அரசகூட்டுத்தாபனங் களின் 10தலைவர் பதவிகளும், ஒரு வெளி நாட்டுத் தூதுவர் பதவியும் ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸிற்கு வழங்கப்பட இருக்கின்றன.

வழங்கப்படவிருக்கும் தூதுவர் பதவி, லண்டனுக்கான இலங்கைத் தூதுவர் பதவி யென்றும், இப்பதவி முஸ்லிம் காங்கிரஸ் அனுசரணையில் முன்னாள் லண்டனுக் கான இலங்கைத் தூதுவர் பாயிஸ் முஸ்தா பாவுக்கே வழங்கப்பட இருக்கிறது எனவும் கூறப்படுகிறது.

வெள்ளிக்கிழமை அமைச்சுப் பொறுப்பு களை ஏற்று அரசுடன் இணைய முஸ்லிம் காங்கிரஸ் விருப்பம் தெரிவித்துள்ளதாக வும் அதற்கு இசைவாக அரசு ஏற்பாடுகளை மேற்கொண்டுவருவதாகவும் அரச தரப் பில் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

அரசுடன் இணைவது தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நிபந்தனை களாக முன்வைத்த 9 அம்சக் கோரிக்கை களை அரசு முழுமையாக ஏற்றுக்கொண் டுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்றுத் தெரிவித்தது.

திங்கட்கிழமை இரவு எட்டு மணிக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதி கள் குழுவிற்கும், அரச பிரதிநிதிகள் குழு விற்குமிடையில் ஜனாதிபதி மாளிகையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது ஒன்பது அம்சக் கோரிக்கைகள் அடங்கிய நிபந்தனைகளை முஸ்லிம் காங்கிரஸ் குழுவினர் அரச குழு வினரிடம் கையளித்தனர்.

நிபந்தனைகளை ஆராய்ந்து பார்த்த அரச குழுவினர், இந்நிபந்தனைகள் சர்ச்சைக்கு உட்படாதவை என்றும் இவற்றை இலகு வாக நிறைவேற்ற முடி யும் என்றும் முஸ் லிம் காங்கிரஸ் குழு வினரிடம் தெரிவித் துள் ளனர். (ஐ)

## வவுனியா அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டைப் பொருத்தி வைத்து அங்கே வெடிக் கச் செய்யப்பட்டிருப்பதாக விசாரணை களில் தெரியவந்துள்ளது.

சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு இராணுவத்தினரும், பொலிஸாரும், விசேட அதிரப்படையினரும் வந்து பார்வையிட் டனர். தேடுதல்களையும் நடத்தினார்கள். இதனைத் தொ[illegible]ந்து இரா[illegible] உயரதி காரிகள், பொலிஸ் உயரதிகாரிகள், வவு னியா மாவட்ட அரச அதிபர், வவுனியா மாவட்ட நீதிவான் ஆகியோரும் அவ்விடத் துக்குச் சென்று பார்வையிட்டனர்.

காலையில் அரச செயலகம் இயங்கத் தொடங்கும் நேரத்தில் நடத்தப்பட்ட இத் தாக்குதல், செயலக ஊழியர்களைப் பதற் றத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்லோராலும்எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களை அரசுடன் இணைப்பது தொடர்பாக ஜனாதி பதி தன்னிடம் எதுவும் கேட்கவில்லை என் றொரு குற்றச்சாட்டை மாத்திரமே ரணில், ஜனாதிபதியிடம் முன்வைத்திருக்கின்றாரே தவிர அவர்களை அரசுடன் இணைப்பது தொடர்பாகமேற்கொண்ட நடவடிக்கைகளை அவர் விமர்சிக்கவில்லை என்று தெரிகிறது.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்கள் யாரையும் நான் கட்டாயப்படுத்தி அரசில் இணைக்கவில்லை. அவர்களாகவே வருகிறார்கள். வருபவர்களை நான் சேர்த் துக்கொள்வேன். இந்த விடயம் குறித்து யாரினதும் ஆலோசனைகளைப் பெற வேண்டிய அவசியம் எனக்குஇல்லை. என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ரணிலிடம் கூறினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் உறுப்பினர்கள், கட்சியை விட்டு விலகி அரசில் இணைவதால் கட்சிக் குப் பாதிப்புத்தான். இருந்தாலும் பெரிய தலையிடி ஒன்று குறைகின்றது என்று ரணில், ஜனாதிபதியிடம் கூறினார் என்றும் கூறப்படுகிறது.

இருப்பினும் இச்சந்திப்பின் போது இருகட்சிகளுக்கும் இடையே செய்து கொள் ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேலும் பலப்படுத்துவது தொடர்பாகவே அதிகம் பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்படு கிறது.

எனினும், நேற்றைய சந்திப்பு தொடர் பாக ஜனாதிபதி செயலகத்தில் இருந்தோ, ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையிடமி ருந்தோ உத்தியோகபூர்வமான கருத்து எது வும் உடனடியாகத் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை -முக்கிய விடயங்கள் தொடர்பாக ஜனாதி பதியும், ரணிலும் மீண்டும் ஒரு தடவை சந்தித்துப் பேசுவர் என்று அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

## கொள்ளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும் தொலைபேசி இலக்கங்களுக்கு தக வல் தரும்படி கேட்கப்பட்டுள்ளது.

பிரதேச ரீதியாக தொலைபேசி இலக் கங்கள் வருமாறு:-

அச்செழு -021 222 3040, 021 222 5360, ஊரெழு, கோண்டாவில், திருநெல்வேலி - 021 222 9978, 060 221 3115, அச்சுவேலி, கோப்பாய் -021 226 3450, யாழ்.நகரம் - 021 222 8003, 021 222 7190, கொழும்புத்துறை, பாசையூர் - 060 221 3051, 060 221 3242, நல்லூர், கந்தர்மடம்-021 222 2036, 021 222 5495, சின்னக்கடை, நாவாந்துறை - 021 222 3708, உடுவில் - 021 222 2038, 060 221 2204, சுன்னாகம், இணுவில், கொக்குவில் - 021 222 8112, மானிப்பாய், சண்டிலிப்பாய், ஆனைக்கோட்டை - 021 222 9809, 2021 222 9810, இருபாலை, கல்வியங்காடு - 060 221 2956, அரியாலை - 025 222 0964, 021 222 9802, 0777 305073, 021 222 7407, குடத்தனை-அத்தாய் - 021 226 3151, 060 221 2217, 021 226 3413, நுணாவில், 021 222 2088, 021 22 2 3136, கோவிலாக்கண்டி, தனக்கிளப்பு - 060 221 3114, சாவகச்சேரி - 060 221 2348, 060 221 3632, மீசாலை - 021 226 3160, கொடிகாமம் - 060 221 3106, அல்லாரை, வெள்ளாம்போக் கட்டி, கச்சாய் - 060 221 3189, வரணி - 060 221 2464, பருத்தித்துறை - 021 226 3672, 021 226 3225 , பல்லைப்பாய், புலோலி, மந்திகை - 0112 748686, தொண்டைமானாறு , திக்கம், அல்வாய், வியாபாரிமூலை - 060 221 2852, நெல்லியடி - 021 226 4618, கற்கோவலம் - 060 221 2823, விடத்தற்பளை, மிருசுவில் - 060 222 3502, 060 221 3258, விடத்தற்பளை - 060 221 3099, மிருசுவில் - 060 221 2828,

இதேவேளை -

யாழ்ப்பாண நகரப் பகுதியிலும் ஏனைய புற நகர்ப் பகுதிகளிலும் கொள்ளை மற் றும் திருட்டுச் சம்பவங்களைத் தடுப்ப தற்கு 512 ஆவது படையணியினர் உரிய நடவடிக்கை எடுப்பர் என்றும் -

கொள்ளைகளை முறியடிப்பதற்கு பொதுமக்களுக்கு உதவுவதற்கு இராணு வத்தினர் எந்த நேரத்திலும் தயாராக இருப் பர் என்றும் - 512 ஆவது படையணி யின் தளபதி உதய னுக்குத் தெரிவித் தார். (அ-1)


### தவறிவிட்டது

க.திருலோகநாதன் (சிறி சக்தி ஸ்ரோர்ஸ்) என்பவருடைய முக்கிய கணக்குப்புத்தகங்கள்,பணம், திறப்புக்கோர்வை, வங்கி ரசீதுகள் அடங்கிய கறுப்பு நிறப்பை ஒன்று குமாரசாமி வீதி, இராமநாதன் வீதி, பிறவுண் வீதி, ஆடியபாதம் வீதி வழியில் நேற்றுத் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சிறி சக்தி ஸ்ரோர்ஸ், 310ஏ, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொ.பே.: 222 2523

### அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



ஜனனம் 10.02.1942 மரணம் 18.12.2006

எமது அன்புத் தெய்வம்

அமரர் பொன்னையா செல்வம்

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் அஞ்சலி பிரசுரங்கள் மூலமும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் உ[illegible]றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், இன்று (17.01.2007) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி, சபிண்டீகரண கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்:

17/1, [illegible], யாழ்ப்பாணம். பொ.[illegible] (மகன்), [illegible] (மகள்).

2006O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான கணனிப் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

Start On :- 20.01.2007

மேலதிக விபரங்களுக்கு நேரில்

Softview Computer College

55, Arasady Road, Jaffna. T.P: 021 2225170

NEW SCIENCE CENTRE யாழ்.நகர்

Radiation

ஆரம்பம் 18.01.2007

Thurs.-2.30 - 4.30

BY: K.செல்வன்

Waves

Sat. Sun.

11 - 12.30

BY: விஜயகுமாரன்

Proprietor

Poobalasingum

CHEMISTRY CENTRE Temple Rd (Green park அருகே)

A/L 2009

GENERAL

Tue. Fri 3.30 - 4.30

THERMO

Wed. 3.30 - 4.30

அன்பழகன் B.Sc.

Radiant

கல்வி நிலையம்

அரியாலை

A/L 2009 ஆரம்பம்

21.01.2007

ஞாயிறு 3 p.m.

Tamil- A.[illegible]

Logic- M.[illegible]

H.C.- M.[illegible]

Chri.- T.[illegible]

Dra.- M.[illegible]

வர்த்தகப்பிரிவு

Aco.-[illegible]

Eco.-N.B.[illegible]

B'st.-S.[illegible]

Note:

A/L 2008,2007

வகுப்புகளும் நடைபெறுகின்றன.

### 31 ஆம்நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 16.12.2006 சனிக்கிழமை இறைபதம்அடைந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு

அமரர் திருமேனி நடராஜா

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (17.01.2007) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம்தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இருபாலை வீதி,

கோண்டாவில்கிழக்கு, கோண்டாவில். குடும்பத்தினர்.

### யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

### முக்கிய அறிவித்தல்

ஒவ்வொரு கிளை உறுப்பினர்களுக்குமான கலந்துரையாடல் கீழ்வரும் திகதிகளில் கிளைத் தலைவர்மார் தலைமையில் சங்க மண்டபத்தில் மு.ப. 11 மணிக்கு நடைபெறவுள்ளதால் சகல அங்கத்தவர்களும் தமது கிளைக்குரிய திகதிகளில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

உடுவில், தெல்லிப்பழை கிளை உறுப்பினர்கள் -17.01.2007

நல்லூர், கோப்பாய் கிளை உறுப்பினர்கள் - 18.01.2007

யாழ்ப்பாணம், தென்மராட்சி உறுப்பினர்கள் -20.01.2007

வடமராட்சி கிளை உறுப்பினர்கள் -21.01.2007

சங்கானை, சண்டிலிப்பாய் - 22.01.2007

-செயலாளர்.

### காசோலை தவறிவிட்டது

"இளங்கோ சனசமூக நிலையம், அல்வாய் வடக்கு" என்னும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் இரண்டு 07.01.2007 முற்பகல் 9 மணிக்குஅல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்து ஒப்படைப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

021 226 3471

தலைவர்/ செயலாளர்

இளங்கோ சனசமூக நிலையம்,

அல்வாய் வடக்கு, அல்வாய்.

### மரண அறிவித்தல்

திருமதி தில்லைநாயகி சிவசுப்பிரமணியம்



ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தில்லைநாயகி சிவசுப்பிரமணியம் நேற்று (16.01.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா நாகரட்ணம் தம்பதியரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற சரவணையூர் மார்க்கண்டு - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும் இ.மா.சிவசுப்பிரமணியத்தின் (இளைப்பாறிய ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி) மனைவியும் சிவநேசன் (கல்வி அமைச்சு, இசுறுபாய), சிவசங்கர் (ஆசிரிய மாணவன், கோப்பாய் ஆசிரிய கலா சாலை), சிவதர்சினி ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற விஜயநாதன் மற்றும் சபாநாதன், லோகநாயகி (அமரர்), சுந்தரலிங்கம், திருமங்களநாயகி, செல்வநாயகி, ஞானதேவன் (பின்லாந்து), இராஜநாதன் (அமரர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலைமகள் (கனடா), பாலசுப்பிரமணியம், கைலாசபதி (பதி) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2007) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

271/6, நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். தொ.பே.:021 222 8080

இ.மா. சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி - கணவர்).

### மரண அறிவித்தல்கள்

சிவஸ்ரீ சிவகடாஷ கணேசலிங்கக் குருக்கள்



தெல்லிப்பழை, காசிவிநாயகர் தேவஸ்தானம், மகாதனை நரசிங்க வைரவர் தேவஸ்தானம் என்பவற்றின் ஆதீனகர்த்தாவும் பாலர் ஞானோதயா சபையின் தலைவருமாகிய சிவஸ்ரீ சிவகடாஷ கணேசலிங்கக் குருக்கள் நேற்று (16.01.2007) செவ்வாய்க்கிழமை காசிவிநாயகர் திருவடிநிழலை அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று தெல்லிப்பழையில் நடைபெற்றன.

தகவல்:

பிரமஸ்ரீ சு. வரதராஜசர்மா

மருதப்பிள்ளை சோதிநாதன்



(ஓய்வுபெற்ற மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் M.L.T.)

சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட மருதப்பிள்ளை சோதிநாதன் 14.01.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மருதப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி -இராசம்மா தம்பதியரின் மருமகனும் ஞானேஸ்வரியின் கணவரும் சிவகணேசன்(பிரதேச செயலகம் -உடுவில்), சிவானந்தி (பிரதேசசபை, நல்லூர்), சிவகுமார்(பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), சிவநாதன்(செலிங்கோ நிறுவனம், கொழும்பு), சிவனேசன் (N.D.T. மொறட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் தந்தையும் மலர்விழி(ஆசிரியை, கோட்டைக்காடு அ.த.க.பாடசாலை), பிரதாபன் (நல்லூர்பிரதேச சபை) ஆகியோரின் மாமனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 18.01.2007 மு.ப. 9 மணிக்குநடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாந்தி பவனம், சித்தன்கேணி. தகவல்: குடும்பத்தினர்.

பரருபசிங்கம் கதிர்காமநாதன்

புங்குடுதீவு, 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொட்டடி வைரவர் கோயில் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட பரருபசிங்கம் கதிர்காமநாதன் நேற்று (16.01.2007) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவனேசத்தின் கணவரும் கருணதேவி, பாலசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் தந்தையும் சிவதேவனின் பெரிய தந்தையும் செல்வரத்தினத்தின் மச்சானுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2007) புதன்கிழமை 50/28, கொட்டடி வைரவர் கோயில் ஒழுங்கையில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் பி.ப. 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

50/28, வைரவர் கோயில் ஒழுங்கை, கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்: செல்வா, ராசன், ரஞ்சி, அன்னலிங்கம்.

திருமதி பாலகிருஷ்ணன் பரிமளம்

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலகிருஷ்ணன் பரிமளம் நேற்று (16.01.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2007) புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் இருளன் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

தகவல்: பா.ஜெகதீஸ்வரன் (மகன்-ஈசன்)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.01.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org